10 ஜூன் 2018

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பாஸ்கா காலம் 10ம் ஞாயிறு

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

### மாதாந்திர கருப்பொருள்:

## எடுத்து, பிட்டு, கிறிஸ்துவில் அளித்து

# விசுவாசத்தில் ஒன்றித்திருப்போம்



எனது தந்தையின் சித்தப்படி நடப்பவர்கள், எனது குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என நெற்றியில் அடித்தாற்போல் இயேசு கூறியிருக்கிறார். கடவுள் சித்தப்படி நடந்தால், அவரது குடும்பத்தில் நாமும் ஒருவராவோம். அவரது மகன் செய்யும் அனைத்திலும் மகன் வழியாக கடவுளை விசுவசிக்க வேண்டுமென கடவுள் விரும்புகிறார் என்பதை தந்திர புக்தி கொண்ட கூட்டத்தின் மத்தியில் அவர் வலியுறுத்தி கூறுகிறார். வார்த்தையே மகன். தந்தையின் அன்பை மகனே காட்டுகிறார். மகன் என்பது வாக்குறுதி. இதனை நீ விசுவசித்தால், தீர்ப்புக்குள்ளாக மாட்டாய் எனக் கூறுமளவுக்கு இயேசு சென்றியிருக்கிறார். 'ஊரு இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்' நம்மிடமிருந்து யாராலும் பிரிக்க முடியாது என்பதால் இந்த ஒன்றிப்பை செயல்படுத்தும்படி நம்மை இயேசு கேட்டுக் கொண்டிருக்கிறார். தந்தை, இயேசு, தூய ஆவி ஆகிய மூவரும் ஒன்றே, மகன் வழியாக நாமும் ஒன்றாக இருக்க வேண்டும்.

இந்த மனிதரால் பேயையும் பிசாசையும் விரட்ட முடியும் என்பதை இஸ்ராயேல் மக்களால் ஜீரணிக்க முடியவில்லை. 'இவனுக்கு பேய் பிடித்திருக்கிறது' என்று பிதற்றினார்கள். தெளிவான அடையாளத்தை இயேசு காட்டினார். ஆனால் அவர்கள் புரியாத அடையாளத்தை நாடினர். 'நித்தியத்தை' விடுத்து, 'தற்காலிகத்தை' நாடுவதாக அவர்களின் போக்கு அமைந்திருக்கிறது என புனித பவுல் குறிப்பிடுகிறார். அதிசயத்தைக் காண அவர்கள் விரும்பினர், ஆனால் அதிசயத்திற்கு எல்லாம் அதிசயத்தை அவர்களால் காண முடியவில்லை. அனுகூலத்தை நாடி வந்த அவர்களுக்கு காலத்தால் அழியாத வெளிபாட்டை, இயேசுவை நம்ப மறுத்தனர். நாமும் சில வேளைகளில் இந்த உண்மையை மறைக்கும் போது அல்லது மறுக்கும் போது தூய ஆவிக்கு எதிராக பாவம் செய்கிறோம்.

ஏவாளை வழித் தவற வைத்த பாம்பை கொடூரமாக காட்டுகிறது, விவிலியம். அதன் தண்டனை, வயிற்றினால் ஊற வேண்டும். பாவம் பற்றி கடவுள் தெளிவுப்படுத்துகிறார். அவரை நம்ப, விசுவாசிக்க மறுத்தால், அதற்கான விளைவு நித்தியமானது. நமது விசுவாசத்தை ஒன்றாக ஒற்றுமையாக காட்ட வேண்டும். நமது குடும்பத்தில் யாரும் விசுவாசத்திலிருந்து விலகி விடக்கூடாது. நாம் விசுவாசத்தை ஒன்றாக அறிக்கையிடும் போது கடவுள் பூரிப்படைகிறார். நாம் தற்காலிகமல்ல, நித்திய விசுவாசிகள், மறுவுலகிலும். ஒன்றுபட்டிருந்தால் நம்மிடையே குழப்பம் ஏற்படாது. மகனை நாம் விசுவசிப்பதால், நாம் தந்தையில் எல்லாமாக இருப்போம். 'ஒரு குடும்பமாக' உண்மையிலும் ஆவியிலும் நடக்க இந்த ஒற்றுமை துணைபுரியும், திருப்பாடல்(130) கூறுவது போல, 'ஆண்டவரையே நம்பியிரு; பேரன்பு அவரிடமே உள்ளது; மிகுதியான மீட்பு அவரிடமே உண்டு' என துணிச்சலாக உச்சரிக்க முடியும். †

> ஒற்றுமை படிப்படியாக வளரும்; நிலைக்குத்தி விடாது. நாம் ஒன்றாக இருப்பதே ஒற்றுமை.
>
> - திருத்தந்தை பிரான்சிஸ்

**வாரம் ஒரு வசனம்**

நாம் தற்காலிகமல்ல, நித்திய விசுவாசிகள்

INTERNAL CIRCULATION ONLY
BUL 23/2018

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Steno Print Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

**மினவுதல் மாதா தேவாலயம்**
85 A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitaion@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. அண்ட்ரூ கூய்

*2018 ஆம் ஆண்டின் கருப்பொருள்*
***எதிர் நோக்கு கொண்ட சீடர்களாகுவோம்.***
*2018 ஜூன் (ஆனி) மாதத்தின் கருப்பொருள்:*
***எடுத்து, பிட்டு கிறிஸ்துவில் கொடுங்கள்***
**மினவுதல் தேவாலயத்தின் 170 ஆம் ஆண்டை நோக்கிய பயணம்**
**(1848 - 2018)**

**பங்கு அலுவலக நேரம்**
திங்கள் - வெள்ளி: காலை 8.30 - மாலை 5.30
சனி: காலை 8.30 - மாலை 7.30
ஞாயிறு: காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்: பொதுக்காலம் 10ஆம் ஞாயிறுசனி 09 -06-2018 - ஞாயிறு 17-06-2018 வரை**
தொ.நூ: 3:9-15 தி.பா: 129:1-2, 3-4, 5-6, 7-8 2 கொரி: 4:13 -5:1 மாற்கு: 3: 20 - 35
**"பேரன்பும் மீட்பும் ஆண்டவரிடமே உள்ளன." திபா 129**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 09 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை /நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/<br>திருப்பலி (இளைஞர்கள்) | **விவிலியக் கல்வி (Bible Knowledge)** : மதியம் 2.30 மணி ஆலய மண்டபம் மேல் அறை |
| ஞாயிறு | 10 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>01.00 பக | திருப்பலி (த) (பு.பெட்ரிக்)<br>திருப்பலி (ஆ) (புனித கத்தெரின்)<br>திருப்பலி (சீனமொழி)<br>மாலை 4.30 தித்தி (சீ)<br>திருப்பலி (தேமொழி) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15 |
| திங்கள் | 11 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (ஆ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| செவ் | 12 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (சீ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| புதன் | 13 | 6.45 கா | திருப்பலி | |
| வியா | 14 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (த) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| வெள் | 15 | 6.45 கா | திருப்பலி | |

**பொதுக்காலம் 11ஆம் ஞாயிறு**
எசே: 17: 22-24 தி.பா: 91: 2-3, 13-14, 15-16 2 கொரி: 5: 6 -10 மாற்கு: 4: 26 - 34
**"உமது பெயரைப் பாடுவது உன்னதரே நன்று." திபா 91**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 16 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை /நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(புனித ரோஸ்) | **விவிலியக் கல்வி (Bible Knowledge)** : மதியம் 2.30 மணி ஆலய மண்டபம் மேல் அறை<br>**மாலை 7.00 மணிக்கு குழந்தைகளுக்கான திருமுழுக்கு** |
| ஞாயிறு | 17 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>01.00 பக | திருப்பலி (த) (பு.மொனிக்கா)<br>திருப்பலி (ஆ) (மறைக்கல்வி படிவம் 4)<br>திருப்பலி (சீனமொழி)<br>திருப்பலி (தேமொழி) | **மறைக்கல்வி வகுப்புக்கள் நடைபெறாது** |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் படல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

**2018 ஜூன் (ஆனி) மாத செய்திகள் / நிகழ்வுகள்**
i) ஆலய காணிக்கை
அ) 02/03 ஜூன் 2018 ரிம: 10,371.65
ஆ) சமூக அக்கறைப்பணிக்குழு: ரிம: 5,580.20
*இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!*

ii) பங்கு அலுவலகம் பொது விடுமுறை
ஹரி ராயா பெருநாளை முன்னிட்டு ஜூன் 15 &16 ஆகிய தேதிகளில் பங்கு அலுவலகம் மூடப்பட்டிருக்கும்.

iii) பங்கு மூத்த குடிமக்கள் ஒன்றுகூடல்: நடனத்தோடு கூடிய விருந்து (25-08-2018) இதற்கான டிக்கெட்டுக்களை வாங்கிக் கொள்ள தொடர்புக்கு: மரியதாஸ் (06- 761 2777) மார்ஜி (018-395 0546)

- **பங்கு மக்களுக்கு ஓர் அழைப்பு:** நம் ஆலயத்தில், மாதா கெபியில் உங்களுக்கு ஏற்பட்ட அற்புத அடையாளங்களை தெரிவிக்க அழைக்கிறோம். பங்கு அலுவலகம் அல்லது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும்.
- **பைபிள் பாடம் எஸ்.பி.எம்** தேர்வில் பங்கு கொள்ள இப்போதே தயாராகுங்கள். படிவம் 3 மாணவர்களை இந்தப் பாடத்தில் கலந்து கொள்ள அழைக்கிறோம். (வகுப்புகள் சனிக்கிழமை பகல் 2.30) தற்போது படிவம் 4 & 5 மாணவர்கள் கலந்து கொள்கிறார்கள்.தொடர்புக்கு. ஹெல்டன் 012-237 0982
- இந்த மாணவர்கள் ஜூன் 10 (ஞாயிறு)காலை உணவு விற்பனை செய்கிறார்கள். வாங்கி ஆதரவு தரவும்.
- **மெத்தோடிஸ்ட் பள்ளிக்காக நிதி திரட்டு - 03-06-2018** நம் மினவுதல் தேவாலய உணவு விடுதியில் காலை உணவு விற்பனை. தொடர்புக்கு: ஸ்டீபன் 016-6110681 / 016-2681531

- **திவ்விய நற்கருணைப் பேழை: ( மினாங்கபாவ் கட்டிடக்கலை)** நெகிரி செம்பிலான் மாநிலத்தின் தாய் திருச்சபையாகத் திகழும் நமது ஆலயத்தில் இந்த முறையில் நற்கருணைப் பேழை அமைத்ததற்காக நாம் பெருமை கொள்கிறோம். இந்தப் பேழை மிகவும் தாராள இட வசதியோடு, ஆண்டவரோடு ஆழ்ந்து தியானம் செய்யும் வகையில் அழகுற அமைந்துள்ளது.
- **170 ஆம் ஆண்டு வரலாற்று காஃபி டேபிள்** புத்தகம் ஒளிவட்டோடு தயாராகி உள்ளது. உங்களுடைய பதிவுக்கு : ஜெரோம்: 019-790 8071 அல்லது பங்கு அலுவலகத்தை நாடவும். ஜூன் 1 முதல் GST வரி விலக்கிக்கொள்ளப்பட்டதால் அதிக செலவுகள் குறைக்கப்பட்டுள்ளது. இன்னும் இரண்டு வாரத்தில் விநியோகிக்கப்பட்டு விடும். தாமதத்திற்கு வருந்துகிறோம்.உங்களுடைய ஆதரவுக்கு நன்றி (170 ஆம் ஆண்டு நினைவுப்புத்தக குழுவினர்)
- **உறுதிப்பூசுதல் அருளடையாளக் கொண்டாட்டம்:** ஜூலை 21 , சனிக்கிழமை மாலை 6.00 மணி. அனைத்து உறுதிப்பூசுதல் மாணவர்களும் அதிசு/பங்குப் பணிக்குழுக்களில் இணைந்து பணி செய்ய அழைக்கிறோம். கடந்த உறுதிப்பூசுதல் முகாமில் உதவி செய்த பெற்றோர் /மறைக்கல்வி ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றிகள். அருள்திரு ஜோஜ் அவர்கள் ஒவ்வொரு மாணவரையும் சந்தித்து பேச இருக்கிறார்.
- **அனைத்து பூர்வீக குடிமக்களின் தோட்ட ஒருங்கிணைப்பாளர்கள், நெகிரி மாநில குருக்கள் மற்றும் பேராயரோடு சந்திப்புக் கூட்டம்.**(கம்போங் செபீர், பெலிஹோய், தெக்கிர்) நாள்: ஜூன் 14, 2018 (புதன்) இவர்களுக்காக நாம் செபிப்போம்.
- **தாபோங் ஹரப்பான் - தேசிய நிதிக்கு காணிக்கை:** மினவுதல் மாதா தேவாலயத்தின் ஜூன்23/24 வார இறுதி காணிக்கையை மாமறை மாவட்ட தேசிய நிதி அலுவலகத்திற்கு அனுப்பப்படும். பிறகு அது நாட்டின் நிதி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்படும்.
- **கையேடு:** மாமறை மாவட்ட எட்டு குழுக்களின் செயல்பாடுகள் அடங்கிய கையேடு ஒவ்வொரு அதிசு / சோன் / பணிக்குழுக்களுக்கு வழங்கப்படும். உங்களுடைய பிரதியை பெற்றுக்கொள்ளுங்கள்: தொடர்புக்கு ஜோன் மெய்னார்ட் (BECAT).

- **அருள்திரு. ஜோர்ஜ் ஹாரிசன்** ஜூன் 8-16 வரை ஆல்ஃபா மாநாட்டுக்காக, ஹாலிபேக்ஸ், கனடா செல்கிறார்.
- **தேசிய மொழி - குழுவினரின் தேர்தல் கூட்டம் -** ஜூன் 17,2018 பகல் 2.30 ஆலய மண்டபத்தில் நடைபெறும்.
- **குருக்களின் மாதாந்திர தியானம்**; 19 & 20 ஜூன் 2018,
- **மார்ஜெரி திரு இருதய ஆண்டவர் திருவிழா** ஜூன் 22-24 , 2018
- **அதிசு ஒருங்கிணைப்பாளர்குழு கூட்டம்:(BECCOT)27-06-2018**
- **மலேசிய குருக்களின் ஆண்டுப் பேரவை:** ஜூலை 16-20, 2018 மாஜோடி, ஜோகூர் பாரு

**மரித்த ஆன்மாக்களுக்காக செபிப்போம்**
ஜோசப் ஜோன் ஸ்டாமரியா (இறப்பு) 31-05-2018
**முடிவில்லா ஒளி இவர் மேல் ஒளிர்வதாக!**

இன்று திருப்பலியை வழிநடத்திய அதிசு வினருக்கும் மற்றும் திருவழிபாட்டுக் குழுவினருக்கும் நம்முடைய மனமார்ந்த நன்றிகள்

ஹரி ராயா பெருநாளைக் கொண்டாடும்
நம்முடைய முஸ்லிம் சகோதர சகோதரிகள் அனைவருக்கும்
*"ஹரிராயா பெருநாள் வாழ்த்துகள் & மாஃப் ஸஹிர் டான் பாத்தின் "*